அப்படிப்பட்ட நிலை இல்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெளிவாகக் கூறிக்கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலை வருமானால் அதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது. அவர்களுடைய உரிமைகளைக் காப்பாற்றும் அளவுக்கு இருக்கும். அதே போல் மத்திய அரசு புலன் விசாரணை செய்யவோ, அல்லது இப்படி கட்சி மாச்சர்யங்கள், மாறுபாடுகள் உள்ளவர்களைக் கைது செய்யும்படியோ, அவர்களுக்குத் தொல்லை கொடுக்கின்ற அளவிற்கு நடவடிக்கை எடுக்கவோ, எந்தவிதமான உத்தரவும் வரவில்லை என்பதைத் தெளிவாகக் கூறிக்கொள்கிறேன். ஆகவே, இந்தப் பொருள் குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இசைவு மறுக்கப்படுகிறது.

[முற்பகல் 10–20]

4. கவன ஈர்ப்புகள்

அ. 84 டிப்ளமோ என்ஜினீர்கள் கைது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 54—வது விதியின்கீழ் திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். வரதராஜன் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவனஈர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் அவர்கள் அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, என்ஜினியரிங் டிப்ளமா பெற்ற 84 என்ஜினியர்கள் மதுரை, தல்லாகுளம் போலீசாரால் 4–7–1980 அன்று கைது செய்யப்பட்டுள்ளதும் அதனால் அப்பகுதி மக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்த' அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, 4–7–80 அன்று மதுரையில் தமிழ்நாடு மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் கோட்டப் பொறியாளர்களின் கூட்டம் நடந்து கொண்டிருந்த போது முற்பகல் சுமார் 11 மணியளவில் மதுரை, இராமநாதபுரம் மின் அமைப்புகளில் உள்ள

பொறியியல் டிப்ளமா பெற்றவர்கள் சங்கத்தை சார்ந்த 84 பேர் மேற்பார்வை பொறியாளரின் அறையின் முன் அமர்ந்து கொண்டு மறியலில் ஈடுபட்டனர். அச்சங்கத்தின் மூன்று பிரதிநிதிகளை அழைத்து பேசியபோது, அவர்கள் திருமங்கலம், வத்தலகுண்டு மற்றும் மதுரைக் கோட்டங்களில் உள்ள இளநிலைப் பொறியாளர்கள் கொடுமைப்படுத்துவதாகவும், கிளை செயலாளர் திரு. காந்தி என்பவர் பழிவாங்கப்படுவதாகவும், திரு. காந்தியை ஊர் மாற்றம் செய்து பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணையை ரத்து செய்ய வேண்டுமென்றும், அவர்களிடமிருந்து எடுக்கப்பட்ட அதிகாரங்களை அவருக்கு திரும்பக் கொடுக்க வேண்டுமெனவும், அவருக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கையைக் கைவிட வேண்டுமென்றும், மேலும், ஆபரேஷன் அண்ட் மெயின்டினன்ஸ் பிரிவு அதிகாரிகளிடமிருந்து விரிவுபடுத்தும் பணிகள் மற்றும் விவசாய பம்புகளுக்கு மதிப்பீடு தயார் செய்தல் ஆகிய பணிகளைத் திருப்பிப் பெற வேண்டுமென்றும் கோரினர்.

2. திரு. காந்தி அவர்களின் ஊர் மாற்றம் செய்து பிறப்பிக்கப்பட்ட ஆணையை ரத்து செய்வதாகவும், அவருக்கு அதிகாரங்கள் திரும்பவும் கொடுப்பதாகவும் பிரதிநிதிகளிடம் தெரிவிக்கப்பட்டது. மற்ற கோரிக்கைகள் குறித்து 5-7-80 அன்று பிற்பகல் 3 மணியளவில் விவாதிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் திரு. காந்தி அவர்களின் மாற்றத்தை ரத்து செய்து அந்த ஆணையை உடனடியாக கொடுக்கவேண்டுமென்றும், அவ்வாறு கொடுத்தால்தான் போராட்டத்தில் இருக்கின்றவர்கள் அவ்வலுவலக வராண்டாவைவிட்டு நகருவார்கள் என்றும் கூறினார்கள். இவ்வாறு ரத்து ஆணையில் கையொப்பமிடுமாறு மேற்பார்வை பொறியாளர் வற்புறுத்தப்பட்ட போதிலும் அவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆர்ப்பாட்டக்காரர்களை அமைதியாகக் கலைந்து போகச் செய்யும்படி சங்கத்தின் அலுவலர்களைக் கேட்டுக் கொண்டது பயனளிக்கவில்லை. முற்றுகை பிற்பகல் 4-00 மணி வரை தொடர்ந்ததால், காவல் துறையினரின் உதவி நாடப்பட்டது. சுமார் 4-30 மணியளவில் வந்த காவல்துறையினர் 5 மணியளவில் அவர்களை அகற்றிச் சென்றனர்.

அன்று சுமார் இரவு ஒன்பது மணியளவில் அவர்கள் ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர் என்று காவல் துறையினரிடமிருந்து தெரிய வருகிறது.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்கள் சொல்லியிருப்பதிலிருந்து அவர்கள் சங்கம் அமைத்து கோரிக்கைகளை வைத்த ஒரே காரணத்திற்காக அந்தச் சங்கத்தின் செயலாளர் பழிவாங்கப்பட்டிருக்கிறார் என்பதை ஒப்புக்கொள்கிறார்கள் அவர்கள் கோரிக்கைகளை வற்புறுத்துகின்ற வகையில் அமைதி